முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

LAOP 28/2023

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் கோ.த.சா.1 சாட்சியாகிய ம.த.சா 1ன் வாக்குமூலம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி..ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமது அலி | வயது | : | 70 |
| தந்தை/ கணவர் பெயர் | : | பக்கிரி முகமது | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

என் இடத்தினை மாநில நெடுஞ்சாலைத்துறையில தான் எடுத்துள்ளார்கள் என்றால் Highways ல் எடுத்தாக தெரியும், சரியாக எனக்குத் தெரியவில்லை. என் இடம் குறைவாக உள்ளது என்று சொல்லியுள்ளதால் யாரிடம் அந்த இடம் உள்ளது என்பதற்கு அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை. என் நிலம் இன்னொருவரிடம் உள்ள போது அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1 கோடியே 20 லட்சம் எனக்கு சேர வேண்டிய இழப்பீடு தொகை இல்லை என்றால் சரியல்ல. அப்துல் சையது என்பவருக்கு சர்வே எண் 33/2 E –1 ஏ ல் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. முகமது சையது குடும்பத்தினரிடம் 3 தவணைகளாக நான் கிரையம் வாங்கினேன். 1999– 2004 ல் வரை வாங்கினேன். 2004– 2005 மத்தியில் FMBக்கும் நிலம் பரப்பிற்கும் மாற்றம் இருநததால் FMB ல் பிழை இருப்பதாக 2005 ல் தான் நான் தெரிந்து கொண்டேன். முகமது சையதிடம் நான் முறையிட்டேன்.

அதற்கு அவர் FMB யை நானா திருத்தினேன், விருத்தாசலம் சர்வேயர் திருத்தினார் அவரை பார்த்து நீயே திருத்திக்கொள் என்று சொல்லிவிட்டார். நான் அது சம்பந்தமாக அலைந்து கொண்டிருந்த போது அடிக்கடி அதிகாரிகள் மாறிவிடுவார்கள், இடையில் பல முறை எனது கட்டு தொலைந்துவிட்டது என்றும் மனு கொடுங்கள் என்றும் சொன்னார்கள். 2007 வரை அலைந்தேன். சுமார் 2000 வருடத்தில் தினபூமி பேப்பரில் நிலம் எடுப்பதற்காக உத்திரவு போட்டுள்ளதாக செய்தி வந்து ஊரில் பரவியது. அந்த பேப்பரை நான் கண்டறிந்து வாங்கி படிக்கும் போது எனது சர்வே எண் அதில் போட்டிருந்தது. 33/2 B 1 A, 33/2 C ல் நிலம் எடுத்திருப்பதாக போடப்பட்டிருந்தது. அதில் பார்க்கும் போது நிலம் அதிகமாக எடுத்திருந்தார்கள். அதில் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்க வேண்டும் என்று போட்டிருந்தது. உடனே நான் முறையிட்டேன், அதற்கு மனு கொடுத்தேன். அந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன். நிலம் எடுக்கும் தாசில்தார் DRO ஆகியோர்கள் விருத்தாசலம் வந்த போது நான் இது சம்பந்தமாக மனு கொடுத்தேன். FMB ல் திருத்தம் செய்ய வேண்டியிருப்பதால் அவசரப்பட்டு உத்திரவு போடவேண்டாம் என்று மனு கொடுத்தேன். அப்துல் சையது என்ற பெயரை முகமது சையது என்று நான் பெயர் மாற்றி சொல்வதால் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் நான் முகமது சையது என்று தான் நினைத்து கொண்டிருக்கிறேன். FMB திருத்தம் செய்ய WP 18158 /2023 வழக்கினை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலு்ம அது தற்சமயம் நிலுவையில் உள்ளது என்றாலும் சரியல்ல. உத்திரவு போட்டுவிட்டார்கள். அந்த உத்திரவு நகலை தாக்கல் செய்துள்ளேன். அது போல் நான் WP 18158 /2023 உத்திரவு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதும்

நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் சரியல்ல. இந்த வழக்கு தற்சமயம் நிலுவையில் உள்ளதால் சென்னை உயர் நீதிமன்றத்தில் உத்திரவு பிறப்பித்தால் தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும் சரியல்ல. 21.12.2022 அன்று இது சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜராக சொல்லி எனக்கு வந்ததா என்றால் தேதி நினைவில்லை ஆனால் மொத்தம் 5 முறை அழைப்பாணை வந்தது. 5 முறையும் நான் ஆஜரானேன். முதன் முதலில் விருத்தாசலம் நிலம் எடுப்பு அலுவலகத்தில் ஆஜராகினேன். அப்போது DRO உடனடியாக சரி செய்ய சொன்னார். எனக்கு 2 முறை அழைப்பாணை வந்தும் நான் ஆஜராகாத காரணத்தினால் அந்த நஷ்ட ஈடு பணத்தினை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வைப்பீடு செய்துள்ள பணத்தினை சரியான ஆவணங்களை ஒப்படைத்து நான் பெற்று கொள்ள வேண்டும் என்றால் நான் பணம் வாங்க மாட்டேன் என்று சொல்லவில்லை, நான் FMB யை திருத்தம் செய்ய சொல்லி கேட்டதால் தான் தற்போது பணத்தினை வைப்பீடு செய்துள்ளார்கள். 45 சென்ட் நிலம் எடுத்து 15 சென்ட் நிலத்திற்கு மட்டும் தான் பணம் வைப்பீடு செய்துள்ளார்கள். நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள பணத்தினை நான் வாங்கி கொள்கிறேன். மேலும் FMB லும் திருத்தம் செய்து கொடுக்க வேண்டுகிறேன். எனக்கு கேன்சர் கட்டி ஆப்ரேசன் செய்ய சொல்லியுள்ளார்கள். அதற்கு பணம் தேவைப்படுவதால் உடனே பணம் கொடுக்க உத்திரவிட கோருகிறேன்.